# வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி

(விருதுநகர் இந்துநாடார்களுக்குப் பாத்தியப்பட்டது)
மதுரை காமராசர் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப் பெற்ற தன்னாட்சி கல்லூரி
தேசியதரமதிப்பீட்டுக்குழுவின் மறு மதிப்பீட்டில் 'A' (மூன்றாவது சுற்று) அந்தஸ்து பெற்றது

**விருதுநகர்**


நாள்: 18.10.2021

**சுற்றறிக்கை**

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் 60 எஸ், 40 எஸ், 80 எஸ் காட்டன் சேலைகள், செயற்கைப்பட்டுச் சேலைகள் மற்றும் கைலி வேட்டி இரகங்களை 30% விழுக்காடு தள்ளுபடியில் நமது கல்லூரியில் 20.10.2021ம் தேதியன்று பல்நோக்கு அரங்கத்தில் காட்சிப்படுத்தி விற்பனை செய்ய உள்ளார்கள். இந்த சிறப்பு விற்பனை கண்காட்சியில் கலந்து கொண்டு வாங்கி பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

முனைவர் சு.மா.மீனா ராணி
முதல்வர்

வை.கா/-

# கைத்தறி மற்றும் துணிநூல் துறை

அனுப்புநர்
திரு.ந.சங்கரராஜ், பி.காம்.,
உதவி இயக்குநர்
கைத்தறி மற்றும் துணிநூல்
விருதுநகர்.

08 OCT 2021
6272

பெறுநர்
முதல்வர்
வே.வ.வன்னியப்பெருமாள் மகளிர் கல்லூரி
மதுரை ரோடு.
விருதுநகர்.

ந.க.எண்.7049/2021/டி2(2) நாள். 07.10.2021

ஐயா,

பொருள் கைத்தறித் தொழில் – விருதுநகர் சரகம் – விருதுநகர் சரகத்தில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை உதவி இயக்குநர் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி மேற்கொள்ளப்படும் ஜவுளி இரகங்களை 30% விழுக்காடு தள்ளுபடியில் விற்பனை மேற்கொள்வது – கண்காட்சி நடத்த அனுமதி கோருதல் – தொடர்பாக.

பார்வை கைத்தறி ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க. 21414 /2021/ எப்1, நாள்.30.09.2021

***

பார்வையில் கண்டுள்ள சுற்றறிக்கையில், தமிழ்நாட்டில் உள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தியாகும் ஜவுளி இரகங்களுக்கு 30% விழுக்காட்டில் தள்ளுபடி மானியம் அனுமதித்து விற்பனை மேற்கொண்டு ஜவுளி இரகங்களின் இருப்பைக் குறைக்க நடவடிக்கை மேற்கொள்ளவும் மற்றும் மாவட்டத் தலைநகரங்கள் மற்றும் முக்கிய நகரங்களில் சிறப்பு விற்பனை கண்காட்சி நடத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, விருதுநகர் சரகத்தில் கைத்தறி மற்றும் துணிநூல் துறையில் உதவி இயக்குநர் கட்டுப்பாட்டில் இயங்கும் அருப்புக்கோட்டைப் பகுதியில் உள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் 60எஸ், 40எஸ், 80எஸ் காட்டன் சேலைகள், செயற்கைப்பட்டுச் சேலைகள் மற்றும் கைலி, வேட்டி இரகங்கள் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இச்ஜவுளி இரகங்களைத் தங்களது கல்லூரியில் காட்சிப்படுத்தி, விற்பனை மேற்கொள்ள அனுமதி வழங்குமாறும், அதற்கான தேதியினை நிர்ணயம் செய்து வழங்க ஆவன செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்**

**04562-252708 / 8903530631**

(ஒம்)/- ந.சங்கரராஜ்
உதவி இயக்குநர்

உதவி இயக்குநருக்காக

All Covers\D2 section\Ord (01.10.2021)\RC.7049 30% Exhibition Lr to Srividhya College 07.10.2021.doc

# V.V. VANNIAPERUMAL COLLEGE FOR WOMEN

(Belonging to Virudhunagar Hindu Nadars)
An Autonomous Institution Affiliated to Madurai Kamaraj University
VIRUDHUNAGAR - 626 001. (TAMIL NADU)
Re-accredited with 'A' Grade (3rd cycle) by NAAC

Estd. 1962 An ISO 9001 : 2015 Certified Institution

Dr. (Tmty) S.M. Meena Rani, M.Sc., M.Phil., P.G.D.C.A., Ph.D.,
Principal
Mobile : 89033 00236
e-mail : principalvvvc@gmail.com
officevvvc2014@gmail.com

Ph : 04562 - 243133
Fax : 04562 - 248694
Cell : 94890 88703
website : www.vvvcollege.org


நாள்: 13.10.2021

பெறுநர்

திரு.ந.சங்கரராஜ், பி.காம்.,
உதவி இயக்குநர்,
கைத்தறி மற்றும் துணிநூல்,
விருதுநகர்.

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள் : கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் ஜவுளி உற்பத்தி இரகங்களை காட்சிப்படுத்தி 30% விழுக்காடு தள்ளுபடி விற்பனை மேற்கொள்ள அனுமதி வழங்குதல் தொடர்பாக.

பார்வை : 07.10.2021ம் நாளிட்ட (ந.க. எண் 7049/ 2021 / டி2(2) ) எண் கடிதம்

பார்வையில் கண்டுள்ள கடிதத்தின் படி அருப்புக்கோட்டை பகுதியில் உள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்த ஜவுளி இரகங்களை 30% விழுக்காடு தள்ளுபடியில் எங்களது கல்லூரியில் 20.10.2021ம் தேதியன்று காட்சிப்படுத்தி விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்கப்படுகிறது என்பதை தங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி

தங்களன்புள்ள,

இரா. பரணி


IQAC ஒருங்கிணைப்பாளர்


S.M. Meena Rani

முதல்வர்

கை.கா/-


GPS Map Camera
GT NAGAR
GT
Google
Virudhunagar, Tamil Nadu, India
parasakthi nagar, bypass road, east pandiyan colony,Unnamed Road, GT Nagar, Virudhunagar, Tamil Nadu 626001, India
Lat 9.608616°
Long 77.953529°
20/10/21 12:50 PM
Handloom


GPS Map Camera
GT NAGAR
GT
Google
Virudhunagar, Tamil Nadu, India
parasakthi nagar, bypass road, east pandiyan colony,Unnamed Road, GT Nagar, Virudhunagar, Tamil Nadu 626001, India
Lat 9.608723°
Long 77.953504°
20/10/21 01:25 PM
Handloom


GPS Map Camera
GT NAGAR
GT
Google
Virudhunagar, Tamil Nadu, India
parasakthi nagar, bypass road, east pandiyan colony,Unnamed Road, GT Nagar, Virudhunagar, Tamil Nadu 626001, India
Lat 9.608608°
Long 77.953545°
20/10/21 12:50 PM
Handloom


GPS Map Camera
GT NAGAR
GT
Google
Virudhunagar, Tamil Nadu, India
parasakthi nagar, bypass road, east pandiyan colony,Unnamed Road, GT Nagar, Virudhunagar, Tamil Nadu 626001, India
Lat 9.608819°
Long 77.953459°
20/10/21 12:59 PM
Handloom